RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 144 | ஜூன்.1 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# தேர் விபத்து: வருங்காலங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படும் : அமைச்சர் அருண்ராஜ்

சேலம், ஜூன்.1-

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் உள்ள புகழ்பெற்ற அர்த்தநாரீஸ்வரர் கோவில் தேரோட்டம் இன்று நடைபெற்றது. இந்த தேரோட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். இந்நிலையில், தேரோட்டத்தின்போது ரதவீதியில் தேர் திரும்புகையில் தேரின் சக்கரத்திற்குள் 2 இளைஞர்கள் சிக்கிக்கொண்டனர். தேர் திரும்புகையில் தேரின் சக்கரத்திற்கும் அப்பகுதியில் இருந்த சுவருக்கும் இடையே ஹர்ஷ்வர்தன் என்ற இளைஞரும், சஷ்டிகன் என்ற இளைஞரும் சிக்கிக்கொண்டனர்.

இதில், தேரின் சக்கரத்திற்குள், சுவருக்கும் இடையே சிக்கிய இளைஞர் ஹர்ஷ்வர்தன் சம்பவ இடத்திலேயே உடல்நசுங்கி உயிரிழந்தார். படுகாயமடைந்த மற்றொரு இளைஞர் சஷ்டிகன் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் தேர்த்திருவிழாவில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த நபரின்



குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தமிழ்நாடு முதல்அமைச்சர் ஜோசப் விஜய் அறிவித்தார்.

இளைஞர் உயிரிழப்பு

இது தொடர்பாக வெளியான அறிவிப்பில், "நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் (31.05.2026) காலை 10.30 மணியளவில் அருள்மிகு அர்த்தநாரீசுவரர் திருக்கோவில் தேர்த்திருவிழாவின்போது தேரின் சக்கரத்திற்கும் அருகிலிருந்த சுவற்றிற்கும் இடையே எதிர்பாராதவிதமாக சிக்கிக்கொண்ட ஹர்ஷவர்தன் (வயது 18), த/பெ.கோவிந்தராஜா, என்பவர் பலத்த காயம் ஏற்பட்டு திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அவர் உயிரிழந்து விட்டார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

நிவாரணம்

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சஷ்டிகன் (வயது 19). த/பெ.கௌரிசங்கர் என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஐந்து லட்சம் ரூபாய் முதல் அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூடுதல் கவனம்

இந்நிலையில் சேலம் அரசு மருத்துவமனையில் ஹர்ஷவர்தன் குடும்பத்துக்கு அமைச்சர் அருண்ராஜ் ஆறுதல் கூறினார். இதனைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "எவ்வளவோ முயற்சிகள் செய்தும் துரதிர்ஷ்ட வசமாக இளைஞரை காப்பாற்ற முடியவில்லை. அவரை இழந்து வாடும் குடும்பத்திற்கு அரசின் சார்பில் இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன். முதல் அமைச்சரின் கவனத்திற்கும் எடுத்துச் சென்றோம். இளைஞரின் குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் நிவாரணம் வழங்கி இருக்கிறார். வருங்காலங்களில் தேர் விபத்து போன்றவை ஏற்படாமல் தடுக்க கூடுதல் கவனம் செலுத்தப்படும். பாதுகாப்பு ஏற்பாடுகளை இன்னும் முறைபடுத்துவோம்" என்று அமைச்சர் அருண்ராஜ் கூறினார்.



## தேர்தலுக்குப் பின் சொந்த தொகுதிக்கு வந்த இபிஎஸ்: 50க்கும் மேற்பட்ட தவெகவினர் அதிமுகவில் இணைந்தனர்

சென்னை, ஜூன்.1-

சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற்றதற்கு பிறகு முதல்முறையாக எடப்பாடி தொகுதிக்கு வந்த அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு கட்சி நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி முன்னிலையில் தங்களை கட்சியில் இணைந்துக் கொண்டனர்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நெடுஞ்சாலை நகரில் உள்ள வீட்டில் இருந்து புறப்பட்டு சொந்த தொகுதியான எடப்பாடிக்கு தேர்தலில் வெற்றி பெற்று, 28 நாட்களுக்கு பிறகு முதல் முறையாக இன்று வந்தார். அவருக்கு, கட்சி நிர்வாகிகள் பட்டாசு வெடித்து, மலர் தூவி உற்சாகமாக வரவேற்றனர்.

முன்னதாக, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதியில் உற்சாக வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து, உற்சாக வரவேற்பு அளித்த நிர்வாகிகளுக்கு அவர் நன்றி தெரிவித்தார். எடப்பாடி தொகுதியில் தேர்தல் பணியில் ஈடுபட்ட ஒன்றிய, நகர, பேரூர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை சேர்ந்த கட்சி நிர்வாகிகளுடன் பயணியர் மாளிகையில் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ஆலோசனையில் ஈடுபட்டார்.

அப்போது, ஒவ்வொரு வாக்குச்சாவடிகளில் பெற்ற வாக்குகள் குறித்தும், நிர்வாகிகள் செயல்பாடுகள் குறித்தும் நிர்வாகிகளுடன் ஆலோசனையில் ஈடுபட்டார். தொடர்ந்து, அவர் நிர்வாகிகளுடன் புகைப்படமும் எடுத்து கொண்டார். பின்னர், பல்லடம் தொகுதி முன்னாள் எம்எல்ஏ நடராஜன், அவரது ஆதரவாளர்களுடன் வந்து பழனிசாமியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். தொடர்ந்து, தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி முன்னிலையில் தங்களை கட்சியில் இணைந்து கொண்டனர்.

## தமிழக ஆசிரியருக்கு பிரதமர் மோடி பாராட்டு

**புதுடில்லி: ஜூன்.1–**

தமிழகத்தை சேர்ந்த ஆசிரியர் கிரிஜாவை மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பாராட்டினார்.

அவர் கூறியதாவது: சமீபத்தில் தமிழகத்தின் நாகர்கோவிலில், நான் ஒரு ஆசிரியரைச் சந்தித்தேன். அவரை நான் ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன்பும் சந்தித்திருந்தேன். நான் குறிப்பிடுவது கிரிஜா அம்மாவைத்தான். இந்தச் சந்திப்பின்போது, பல இளம் மாணவர்களும் அவருடன் உடனிருந்தனர். கிரிஜா அம்மா ஏறக்குறைய 15 பள்ளிகளை நிர்வகித்து வருகிறார்.

அவற்றுள், சென்னையில் அமைந்துள்ள ஒரு பள்ளி முதன்மையான கல்வி நிறுவனமாகத் திகழ்கிறது. அவரது தேசபக்தி உணர்வு, ஒவ்வொரு இந்தியருக்கும் உண்மையிலேயே ஊக்கமளிப்பதாக உள்ளது. மன் கி பாத் நிகழ்ச்சியிலிருந்து உத்வேகம் பெற்ற கிரிஜா அம்மா, நாட்டின் வீரர்களின் நலனுக்காகத் தானும் பங்களிக்க வேண்டும் என்று உறுதியேற்றார். அந்த நோக்கத்தை முன்னிட்டு, தனது பள்ளிகள் அனைத்திலும் பயிலும் மாணவர்களை இதில் பங்கேற்குமாறு அவர் ஊக்கப்படுத்தினார்.

ஒவ்வொரு குழந்தையும் தினமும் ஒரு ரூபாய் வீதம் பங்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். ஓராண்டு காலத்தில், ஒவ்வொரு மாணவரும் 365 ரூபாயைப் பங்களித்தனர். இத்தகைய சிறிய முயற்சியால் ஏறக்குறைய 40 லட்சம் ரூபாய் திரட்டப்பட்டது. இந்த முழுத் தொகைக்குமான காசோலை ஒன்றை, கிரிஜா அம்மா என்னிடம் ஒப்படைத்தார். அவருடன் நான் உரையாடியபோதுதான், இந்தியா மீது அவருக்குள்ள பக்தி எவ்வளவு பெரியது என்பதை நான் உணர்ந்துகொண்டேன். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## "விஜய் வீடு தேடி வந்து எனக்கு துணை முதல்வர் பதவி கொடுத்திருப்பார்" பிரேமலதா பேச்சு

சென்னை, ஜூன்.1-

"இப்போது அமைச்சர் பதவிக்கு எல்லோரும் ஓடுகிறார்கள். நான் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், விஜய்யே வீடு தேடிவந்து எனக்கு துணை முதல்வர் பதவி கொடுத்திருப்பார். இதுதான் உண்மை" என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா தெரிவித்துள்ளார்.



தேமுதிக மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா, "இந்த தேர்தலில் தேமுதிக மாவட்டச் செயலாளர்கள் விரும்பிய கூட்டணியை அமைத்தோம். நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தல், ஒரு மாயையை உருவாக்கி ஒரு சுனாமி போல அமைந்தது. தேர்தலில் வெற்றி தோல்விகள் சகஜம், மாற்றம் ஒன்றே மாறாதது.

மக்களும், இளைஞர்களும் இந்தத் தேர்தலில் ஒரு முடிவை எடுத்தனர். இன்று அன்றாடம் நடக்கும் பல விஷயங்கள் தமிழக மக்கள், பெண்கள், இளைஞர்களை சிந்திக்க வைத்துள்ளது. இன்று தமிழ்நாட்டில் நடக்கும் அவலங்களை பட்டியலிட்டால் ஒரு நாள் போதாது. தவெக ஆட்சிக்கு வந்த வெகு சிறிய காலத்திலேயே தமிழகம் முழுவதும் பல்வேறு பிரச்சினைகளை மக்கள் சந்தித்துக் கொண்டுள்ளனர். இதற்கான தீர்வை தமிழக அரசு உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

நாம் மதசார்பற்ற ஜனநாயக கூட்டணியில் இருக்கிறோம். இன்று இந்தக் கூட்டணியில் இருந்த கட்சிகளின் ஆதரவை பெற்றே ஆட்சி நடக்கிறது. யாரை தீய சக்தி எனச் சொன்னார்களோ, அந்த 'தீய சக்தியின்' ஆதரவோடு தான் 'தூய சக்தி' எனச் சொன்னவர்கள் ஆட்சியமைத்துள்ளனர். இதனையும் மக்கள் பார்த்துக்கொண்டுதான் உள்ளனர்.

என்னவெல்லாம் வாக்குறுதிகள் கொடுத்து தவெக ஆட்சிக்கு வந்தது என்பது மக்களுக்கு தெரியும். ஒரு புதிய கட்சியின் ஆட்சிக்கு 6 மாத கால அவகாசம் கொடுக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் இன்று மக்கள் பெரிய அளவில் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள் என்பதே கள நிலவரம். பாலியல் குற்றங்கள், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள், மேகேதாட்டு விவகாரம், மின்வெட்டு, விவசாயிகள் பயிர்க்கடன் தள்ளுபடிக்காக போராட்டங்கள் இன்று மாநிலம் முழுவதும் நடக்கிறது.

தேமுதிக என்றால் பேரம், பேரம் என்றார்கள். எந்த பேரத்துக்கும், எந்த பதவிக்கும் ஆசைப்படாத ஒரே கட்சி தேமுதிக தான். வேறு குற்றம் சொல்ல முடியாததால், பேரம் பேரம் என ஒரு புனிதமான கட்சியை களங்கப்படுத்தினார்கள். பதவிக்கோ, பணத்துக்கோ, சோஃபா செட்டுக்கோ ஆசைப்படாமல், நாம் பயணிக்கும் கூட்டணிக்கு விசுவாசமாக, தர்மத்தோடு உண்மையாக இருக்கிறோம்.

நான் நினைத்திருந்தால், விஜய்யை சந்திக்க என்னால் முடியாதா?. அமைச்சர் பதவிக்கு எல்லோரும் ஓடுகிறார்கள். நான் ஒரு வார்த்தை சொல்லியிருந்தால், விஜய்யே வீடு தேடிவந்து எனக்கு துணை முதல்வர் பதவியே கொடுத்திருப்பார். இதுதான் உண்மை. ஆனால் இதற்கெல்லாம் ஆசைப்படும் கட்சியில்லை தேமுதிக. என்றும் கொண்ட கொள்கைக்கும், கூட்டணி தர்மத்துக்கும் உண்மையாக இருக்கும் கட்சி தேமுதிக.

2024 மக்களவைத் தேர்தலில் அதிமுக கூட்டணிக்கு யார் துணை நின்றார்கள். அன்று எல்லோரும் உங்களை விட்டு ஓடியபோது, உங்களை மதித்து நின்ற ஒரே கட்சி தேமுதிகதான். ஏன் அப்போது தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய எங்களுக்கு தெரியாதா?.

2024ல் எடப்பாடி பழனிசாமியை விட்டு ஓடியவர்களை எல்லாம், 2026 தேர்தலுக்காக அழைத்து ஆலோசனை நடத்தினார். ஆனால், 2024ல் உறுதுணையாக நின்ற எங்களை மதித்து அழைத்துப் பேசினாரா?. கூட்டணியை வலுப்படுத்த ஒருங்கிணைந்து போராட்டங்களை, மாநாடுகளை நடத்த வேண்டும் என பழனிசாமியிடம் பல முறை வேண்டுகோள் விடுத்தேன். அதனை அவர் கடைசிவரை கேட்கவே இல்லை.

நாங்கள் ஏதோ எம்.பி சீட்டுக்காக கூட்டணி மாறியதாக சொல்லலாம். ஆனால், அதிமுக கூறிய வார்த்தையை காப்பாற்றாமல், எங்களை மதிக்காத காரணத்தால் கூட்டணியை விட்டு வெளியேறினோம். பிரச்சாரத்தில் அரை சதவீத கட்சி, ஐசியுவில் உள்ள கட்சி என எங்களை பழனிசாமி விமர்சித்தார். ஆனால், இன்று அதே நிலை அந்தக் கட்சிக்கே வந்துவிட்டது. தேமுதிக கூட்டணியில் இருந்து வெளியேறக்கூடாது என அதிமுகவினர் அனைவரும் நினைத்தனர். நம்மை பழனிசாமி குறைத்து மதிப்பிட்டார். அதன் விளைவாக 15 ஆண்டுகளாக பழனிசாமி இருந்த அரசு இல்லத்தை கூட காலி செய்யும் நிலை வந்துவிட்டது. இன்று அதிமுக ஐசியுவுக்கு சென்றுவிட்டது.

2011ல் 29 இடங்களில் வென்ற பிறகு சட்டப்பேரவையில் விஜயகாந்த் மக்களுக்காக பேசினார். அதனை தனிப்பட்ட வெறுப்பாக மாற்றி நம் எம்எல்ஏக்களை விலைபேசி அதிமுகவுக்கு கொண்டு சென்றனர். அன்று தேமுதிகவுக்கு அதிமுகவால் நடந்த கொடுமை, இன்று தவெக மூலமாக அதிமுகவுக்கு வந்துள்ளது. இப்போது கூட அதிமுகவில் 3 எம்எல்ஏக்கள் ராஜினாமா செய்வதாக தகவல்கள் வெளியாகின்றன. அரசியலில் அங்கும், இங்கும் என தாவுபவர்களுக்கு எதிர்காலம் கிடையாது" என்று தெரிவித்தார்.

## திருப்பரங்குன்றத்தில் தவெக பிரமுகரின் மதுக்கூடத்தை ஒட்டிய மதுக்கடை மீண்டும் திறப்பு

திருப்பரங்குன்றம், ஜூன்.1

திருப்பரங்குன்றத்தில் மூடப்பட்ட 3 மதுக்கடைகளில் காவல் நிலையம் அருகிலுள்ள டாஸ்மாக் கடை நேற்று மீண்டும் திறக்கப்பட்டு மது விற்பனை செய்யப்பட்டது. தவெக பிரமுகரின் பாரையொட்டி உள்ள இந்த டாஸ்மாக் கடை விதிமுறையை மீறி திறக்கப்பட்டதாக புகார் எழுந்தது.

தவெக அரசு அமைந்தவுடன் முதல்வர் விஜய் வெளியிட்ட அறிவிப்பில், தமிழகம் முழுவதும் வழிபாட்டுத் தலங்கள், பள்ளிகள், பேருந்து நிலையங்கள் அருகில் உள்ள 717 அரசு மதுபானக் கடைகள் மூடப்படும் என தெரிவித்தார். அதன்படி கடைகள் மூடப்பட்டு வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் முருகப் பெருமானின் முதல் படை வீடான திருப்பரங்குன்றத்தில் 3 டாஸ்மாக் மதுக் கடைகள் மூடப்பட்டன. இந்நிலையில் திருப்பரங்குன்றம் காவல் நிலையம் அருகிலுள்ள கடை (எண் 5556) மீண்டும் திறக்கப்பட்டு மது விற்பனை நடந்தது. வைகாசி விசாகத்தையொட்டி நேற்று ஆயிரக் கணக்கான பக்தர்கள் திருப்பரங்குன்றத்தில் குவிந்தனர். இந்நிலையில், பக்தர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும்படி டாஸ்மாக் மதுக்கடையை திறந்ததால் கடும் எதிர்ப்பு எழுந்தது.

திருப்பரங்குன்றம் தொகுதி தவெக எம்எல்ஏவும், அமைச்சருமான சி.டி.ஆர். நிர்மல் குமார் முன்னிலையில் அதிமுகவைச் சேர்ந்த செல்வம் என்பவர் சில நாட்களுக்கு முன்பு அக்கட்சியிலிருந்து விலகி தவெகவில் இணைந்தார். அவர் நடத்தும் மதுக்கூடத்துக்கு (பார்) அருகில் உள்ள டாஸ்மாக் கடையை விதிமுறைகளை மீறி திறக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் புகார் தெரிவித்தனர். ஆனால், கடையின் ஊழியர்கள், 'இந்த டாஸ்மாக் கடையை மூடுவதற்கு உரிய ஆணை வரவில்லை. அதனால்தான் திறந்து மது விற்பனையில் ஈடுபடுகிறோம்' என்று கூறினர்.

எனினும், வைகாசி விசாகத் திருவிழாவின்போது மதுக்கடையை திறந்து வைத்தது ஏன் என்று பக்தர்கள் கேள்வி எழுப்பி எதிர்ப்பு தெரிவித்தனர். பக்தர்களின் எதிர்ப்பு அதிகரித்ததை அடுத்து, பிற்பகலுக்குப் பின்பு கடையை அடைக்க அதிகாரிகள் உத்தரவிட்டனர். அதன் பின்பு மதுக்கடை அடைக்கப்பட்டது.

# குரூப் -1 முதல்நிலை தேர்விற்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுவதை தேர்வர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

தேனி, ஜூன்.01-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் 2026 ஆம் ஆண்டுத்திட்ட நிரலின்படி தொகுதி 1 முதல்நிலை தேர்விற்கான அறிவிப்பு 23.06.2026 அன்று வெளியிடப்பட உள்ளதைத்தொடர்ந்து, இத்தேர்விற்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்பு தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய வளாகத்தில் 03.06.2026 (புதன் கிழமை) முதல் துவங்கப்பட உள்ளது. இப்பயிற்சியின் போது கட்டணமில்லா பாடக்குறிப்புகள் வழங்கப்படும். மாதிரி தேர்வுகளும் நடத்தப்படும். போட்டித் தேர்விற்கு தயாராவதற்கான அனைத்து வகை



புத்தகங்கள் அடங்கிய நூலகம் செயல்பட்டு வருகிறது. மேலும் இவ்வலுவலகத்தின் மூலம் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இலவச பயிற்சி வகுப்புகளில் பயின்று, தேர்ச்சி பெற்ற 38 நபர்கள் தற்போது அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து வருகின்றனர். எனவே தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் அறிவிக்கப்பட உள்ள தொகுதி 1 முதல்நிலை தேர்விற்கு தயாராகும் விண்ணப்பதாரர்கள் நேரடி பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இப்பயிற்சிக்கு வருகைபுரியும் விண்ணப்பதாரர்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ சமர்ப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 63792 68661 என்ற தொலைப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு பயிற்சியில் சேர்ந்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தெரிவித்துள்ளார்கள்.

# நீலகிரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவமனைகளின் செயல்பாடுகளை கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

நீலகிரி, ஜூன்.01-

நீலகிரி மாவட்டம் குன்னூர் மற்றும் உதகமண்டலத்தில், கால்நடை பராமரிப்புத்துறைசார்பில், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை பண்ணை ஆகியவற்றின் செயல்பாடுகளை, கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் செ.கமலி மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில்நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் நீலகிரி மாவட்டம் குன்னூர்



மற்றும் உதகையில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் பராமரிக்கப்படும் பதிவேடுகள், கால்நடைகள் மற்றும் செல்லப்பிராணிகளுக்கு செலுத்தப்படும் தடுப்பூசிகள், மருந்துகளின் இருப்பு குறித்தும், தினசரி கால்நடை வருகை மற்றும் சிகிச்சை அளிக்கப்படும் முறைகள் மற்றும் கால்நடைகள் மற்றும் செல்லப் பிராணிகளுக்கு அளிக்கப்படும் தடுப்பூசிகளான வெறிநோய் தடுப்பூசி முறைகள் குறித்து கேட்டறிந்தார். உதகை தீட்டுக்கல் பகுதியில் உள்ள மாவட்ட கால்நடை பண்ணையில்அமைந்துள்ள உறைவிந்து குச்சிகள் தயாரிக்கும் ஆய்வகத்தை பார்வையிட்டு தயாரிக்கப்படும் முறைகள் குறித்து பணிபுரியும் கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் துணை இயக்குநரிடம் கேட்டறிந்தார். உதகை நாய் பூங்காவில் செல்லப்பிராணிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு உபகரணங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.ஆர். பாபு, துணை இயக்குநர்கள் மரு இரா.அண்ணாதுரை,, மரு.மு.வெங்கட்டராமன், உதவி இயக்குநர் மரு.பா. சாரதாபாபி, க.கோபி, ராஜஷ்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.





# திருப்பத்தூர் நகர ஆஇஅதிமுக அவசர ஆலோசனை கூட்டம்

திருப்பத்தூர், ஜூன்.01-

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் நகர கழகத்தின் சார்பாக அவசர ஆலோசனை கூட்டம் நகர கழக துணை செயலாளர் ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது.இந்த அவசர அலோசனை கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக திருப்பத்தூர் மாவட்ட கழக செயலாளர் டாக்டர் ச.பசுபதி கலந்து கொண்டு ஆலோசனை வனங்கி சிறப்பித்தார். மேலும் இந்நிகழ்ச்சிக்குமாவட்ட அவைத் தலைவர் புஷ்பநாதன், மாவட்ட துணை செயலாளர் ராஜேந்திரன், ஆலங்காயம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கோ.வி.சம்பத்குமார், கந்திலி ஒன்றிய கழக செயலாளர் டி. டி. சி.சங்கர், மாவட்ட இலக்கிய அணி செயலாளர் தம்பா கிருஷ்ணன், மற்றும் மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பொறுப்பாளர்கள், பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்



# செங்குன்றத்தில் பொதுமக்களுக்கு சுவையான குளிர்ந்த மோர் வழங்கல்

மாதவரம், ஜுன்.1-

மாதவரம் தொகுதி செங்குன்றம் அரிசி மண்டி உரிமையாளர்கள் சங்கம் சார்பில் கோடைக் காலத்தை முன்னிட்டு பொதுமக்களுக்கு சுவையான குளிர்ந்த மோர் வழங்கும் நிகழ்ச்சி சங்கத் தலைவர் கோதண்டபாணி தலைமையில் தொடர்ந்து 20 நாள்களாக செங்குன்றம் மார்க்கெட் காமராஜர் சிலை எதிரே சங்க அலுவலக வாசலில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சங்கச் செயலாளர் ராஜேஷ் கண்ணா, பொருளாளர் நாகராஜன், துணைத்தலைவர் பொன்னையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக செங்குன்றம் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வணிகர்கள் சங்கத் தலைவர் கோபி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு சுவையான குளிர்ந்த மோரை வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.இதில் சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



# மறவமங்கலம் இளையான்குடி துணை மின் நிலையத்தில் மின்தடை

சிவகங்கை, ஜூன்.01-

சிவகங்கை மாவட்டம் காளையார் கோயில் ஒன்றியம் மறவமங்கலம் துணை மின் நிலையம் மற்றும் இளையான்குடி துணை மின் நிலையத்தில் நாளை (ஜுன்02) காலை 10 மணி முதல் மாலை 5மணி வரை கீழ்க்கண்ட ஊர்களில் மறவமங்கலம் துணை மின் நிலையம்: ஆண்டுரணி, காயாஓடை, சிலுக்கப்பட்டி, புலிக்கண்மாய், காஞ்சிப்பட்டி, வலையம்பட்டி, தச்சன்கண்மாய், செவல்கண்மாய், எம்.வாகைக்குளம், டி.வி.கண்மாய், புலியூரணி, மாராத்தூர். இளையான்குடி, கீழாயூர், தாயமங்கலம், சோதுகுடி, கண்ணமங்கலம், புதூர், நகரகுடி, கருஞ்சுத்திமின்தடை ஏற்படும் மின்செயற் பொறியாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

# சூரிய மின்சக்தி திட்டத்தில் 40 லட்சம் குடும்பங்கள் பலன்

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத சூரிய மின்சக்தி பயன்பாட்டை ஊக்குவிக்கவும் வீடுகளில் மின் கட்டண செலவை குறைக்கவும் 'பி.எம். சூர்ய கர்முப்த் பிஜிலி யோஜனா' எனப்படும் சூரிய வீடு இலவச மின் திட்டத்தை மத்திய அரசு கடந்த 2024 பிப்ரவரியில் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 1 கோடி குடும்பங்களுக்கு சூரிய மின்சக்தி உற்பத்தி அமைப்பை நிறுவ மானியம் வழங்கப்படுகிறது. அரசின் இணையதளத்தின் படி, இத்திட்டம் 2027 மார்ச் 31ம் தேதி நிறைவடைகிறது. இதுவரை 68 லட்சத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இதில் 40 லட்சத்து 21,346 குடும்பங்கள் இத்திட்டத்தால் பலன் அடைந்துள்ளன.பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ் தொடங்கப்பட்ட இத்திட்டம், அரசின் சுயசார்பு இந்தியா மற்றும் வளர்ந்த இந்தியா 2047 ஆகியவற்றின் முக்கிய தூணாக முன்னிறுத்தப்படுகிறது.உலக அளவில் எரிபொருள் விநியோகத்தில் நிலையற்ற தன்மை மற்றும் எரிபொருள் மீதான சார்பு அதிகரித்து வரும் இக்காலத்தில் பொருளாதார ஸ்திரத்தன்மை, தேசியப் பாதுகாப்பு மற்றும் நீண்டகால வளர்ச்சிக்கு இத்திட்டம் அவசியமானது என அரசு கருதுகிறது. மின்சாரச் செலவு மற்றும் வழக்கமான எரிசக்தி ஆதாரங்களின் மீதான சார்பை இத்திட்டம் குறைக்கிறது.

# தேனி மாவட்ட ஆட்சித்தலைவராக மரு.இரா.வைத்திநாதன், பொறுப்பேற்றுக் கொண்டார்கள்

தேனி, ஜூன்.1-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்தேனி மாவட்டத்தின் புதிய ஆட்சித்தலைவராக மரு.இரா.வைத்திநாதன், பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2015ஆம் ஆண்டு நடத்தப்பட்ட அகில இந்திய குடிமைப்பணிகள் தேர்வில் தேர்ச்சி பெற்று, சேலம் மாவட்டத்தில் உதவி ஆட்சியர் (பயிற்சி)ஆகவும்,




தேனி (உத்தமபாளையம் வருவாய் கோட்டம்) மற்றும் கோயம்புத்தூர் (பொள்ளாச்சி வருவாய் கோட்டம்) மாவட்டங்களில் சார் ஆட்சியராகவும், தர்மபுரி மாவட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஆகவும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மாநகராட்சி ஆணையராகவும், அதனைத்தொடர்ந்து செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறையின் இயக்குநராகவும் பணியாற்றிய அனுபவம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதுதற்போது, தேனி மாவட்டத்தின் புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக மரு.இரா.வைத்திநாதன், இன்று பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார்கள்.

# பழனியில் இரு குழந்தைகள் நான்கரை நிமிடத்தில் 125 யோகாசனங்கள் செய்து குளோபல் வேர்ல்டு ரெக்கார்டு புத்தகத்தில் இடம்பிடித்து சாதனை படைத்தனர்

பழனி, ஜூன்.1-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள தனியார் பள்ளியில் 7ம் வகுப்பு பயின்று வரும் நகுலன் இவர் மதுரை திருமங்கலம் கட்ராம்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் மற்றும் மேஷவர்ணிகா பெத்தநாயக்கன்பட்டி பகுதியைச் சேர்ந்த இரு குழந்தைகள் யோகாசன பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் இருவரும் ஏற்கனவே நீண்டநேரம் ஆணிப்படுக்கையில் நிற்பது மற்றும் சிரசாசனம் செய்வதில் உலக சாதனை படைத்துள்ள நிலையில் தற்போது புதிய சாதனை ஒன்றை செய்துள்ளனர். பழனியருகே உள்ள பெத்த நாயக்கன் பட்டியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் நகுலன் மற்றும் மேஷவர்ணிகா ஆகிய இருவரும் இணைந்து 4நிமிடம் 37 விநாடிகளில்




125யோகாசனங்கள் செய்து உலக சாதனை படைத்தனர். இதற்கு முன்பாக சாதனையாக செய்யப்பட்ட நேரத்தை விட மிகக்குறைந்த நேரத்தில் 125யோகாசனங்கள் செய்து உலக சாதனை படைத்தது இதுவே ஆகும். உலக சாதனை அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட குளோபல் வேர்ல்டு ரெக்கார்டு நிறுவனத்தின் அதிகாரிகள் பங்கேற்று இரு குழந்தைகளின் சாதனையையும் கண்காணித்து குழந்தைகளின் சாதனையை பதிவு செய்தனர். 5நியிடங்கள் நிர்ணயிக்கப்பட்ட நிலையில் நான்கரை நிமிடங்களிலேயே உலக சாதனை செய்த இரு குழந்தைகளையும், அவர்களுக்கு பயிற்சி அளித்த யோகா ஆசிரியரையும் பள்ளி நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டு பாராட்டினர்.

# குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 66 வது பழக்காட்சி நிறைவு பெற்றது

குன்னூர், ஜூன்.1-

நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ் பூங்காவில், மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக் கலைத்துறை சார்பில் நடைபெற்ற 66 வது பழக்காட்சி நடைபெற்றது. நீலகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கோடை விழாவை முன்னிட்டு மலர்காட்சி, ரோஜாகாட்சி, பழக்காட்சி மற்றும் மலைப்பயிர்கள் காட்சி உள்ளிட்ட பல்வேறு காட்சிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 66வது பழக்காட்சி 27ம் தேதி துவங்கி நேற்று வரை 4 நாட்கள் கோலாகலமாக நடைபெற்றது. இந்தாண்டு பழக்காட்சியின் சிறப்பம்சமாக 1.0 டன் எடை கொண்ட பேரிச்சம் பழங்களை டைனோசர் வடிவமைப்பு பார்வையாளர்களை கவரும் விதமாக அமைக்கப்பட்டிருந்தது

பழக்காட்சியின் பிற அம்சங்களாக 4.5 டன் எடையுள்ள பல்வேறு




பழ வகைகளை கொண்டு ஜூராசிக் பார்க் நுழைவு, சிறிய டைனோசர் டைனோசர் முட்டை மற்றும் முட்டையிலிருந்து வெளிவருதல், தாவரங்களை உண்ணும் டைனோசர் மற்றும் டைனோசர்

காலத்து பறவை போன்ற வடிவமைப்புகளும், தோட்டக்கலைத்துறை மூலம் 160 வகையான பழ அரங்குகளும், அரசு மற்றும் தனியார் அரங்குகள், போட்டியாளர் அரங்குகளும் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது . மேலும், தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்டங்களின் பழ வகைகளை பறைசாற்றும் விதமாக பல்வேறு காட்சி திடல்கள் அமைக்கப்பட்டு, அதில் கோயம்புத்தூர், தர்மபுரி ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, விழுப்புரம், மற்றும் தென்காசி போன்ற மாவட்டங்களை சார்ந்த தோட்டக்கலை துறையினரால் அதியமான் கோட்டை, இருவாச்சி பறவை, மரகதபுறா, இரட்டைமயில், பவானிசாகர் அணை, கழுகு மற்றும் வீணை போன்ற பழங்களை பல்வேறு கொண்டு விதவிதமான உருவங்கள் காட்சிப்ப டுத்தப்பட்டது. மேலும், சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்கள் கண்டு களிக்கும் வகையில் பல்வேறு விதமான கலை நிகழ்ச்சிகள் தோட்டகலைத் துறையின் மூலம் நடைபெற்றது.

கோடை விழாவில் இறுதி நிகழ்ச்சியான பழகாட்சி நிறைவு பெற்றது. இதனைத் தொடர்ந்து கண்காட்சியில் போட்டியிட்ட பழ சாகுபடி விவசாயிகள் மற்றும் கண்காட்சியில் இடம்பெற்ற போட்டியாளர்களை தேர்வு செய்யப்ப ட்டவர்களுக்கு மாவட்ட தோட்டக்கலை துறை துணை இயக்குனர் நவநீதா, குன்னூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் விஜயலஷ்மி நகராட்சி ஆணையர் கிருஷ்ணா ராம்ஆகியோர் சுழற் கோப்பை உள்ளிட்ட பரிசுகள் வழங்கி தோட்டக்கலை துறை அதிகாரிகள் பாராட்டினர்.

# ஏஐ தொழில்நுட்பம் நம்மை கெடுத்துவிட்டது: கங்கை அமரன் வேதனை



டிரம்ஸ் ஜெர்ரி எண்டர்டெயின்மெண்ட் சார்பில் கிளாடி ஜெராடு தயாரிக்க, 'உறவுகள்' என்ற தலைப்பில் 'உயிரிணையே' என்ற இசை ஆல்பத்தின் வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. கங்கை அமரன், இசை அமைப்பாளர்கள் சதா சுதர்சனம், கண்ணன், பாடகி தவசீலி தன்ராஜ், சகோ கணேசன், தயாரிப்பாளர் ரவிகாந்த் கலந்துகொண்டனர். அப்போது கங்கை அமரன் பேசியதாவது: கிளாடி ஜெராடுவின் நல்ல எண்ணம்தான் இப்பாடல் தொகுப்பு. அருமையான சமூக உறவுகளை, ஏஐ மூலம் நடிக்க வைத்து உருவாக்கியுள்ளார். முன்பு ஒரு பாடலை நேரலையில் பாடுவோம்.

இப்போது ஒவ்வொரு வரியாக பாடுகிறோம். ஏஐயில் பீட் செய்து பாடுகிறோம். அதற்கு நாம் எப்படி பெருமைப்படுவது? ஏஐ தொழில்நுட்பம் நம்மை கெடுத்து வருகிறது. அதை மட்டுமே நம்பி பணியாற்றினால், பிற்காலத்தில் நமது மூளை வேலை செய்யாது. ஒரு தீம்ஐ ஏஐயில் கொடுத்துவிட்டால், அதுவே பாட்டு எழுதிவிடுகிறது. இதில் எப்படி நமது பெயரை போடுவது? வருங்கால குழந்தைகள் தானாக சிந்திக்க வேண்டும், எழுத தெரிந்துகொள்ள வேண்டும், தன்னிடம் மறைந்திருக்கும் சுயரூபங்களை வெளியில் கொண்டு வரவேண்டும்.

# சைக்கலாஜிக்கல் திரில்லரில் அபிநயா



அறிமுக இயக்குநர் ஜெகதீஷ் இயக்கத்தில், முற்றிலும் மாறுபட்ட களத்தில் சைக்கலாஜிக்கல் திரில்லராக உருவாகியுள்ள "இரட்டையர்" திரைப்படம் வரும் ஜூன் 5 ஆம் தேதி வெளியாகிறது. தமிழ் சினிமாவில் இதுவரை வந்த திரில்லர் படங்களிலிருந்து மாறுபட்டு, அம்மாவுக்கும் இரட்டை பெண் குழந்தைகளுக்குமான அன்பும் உறவும் மையமாகக் கொண்டு இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது

ஒரு விபத்தில் தந்தை உயிரிழக்கிறார். அதில் தாயின் முகமும் கடுமையாக சேதமடைகிறது. பிளாஸ்டிக் சர்ஜரிக்குப் பிறகு வீட்டிற்கு திரும்பும் தாயின் விநோதமான நடத்தைகள், அவரது இரட்டை பெண் குழந்தைகளின் வாழ்க்கையை பாதிக்க தொடங்குகிறது. இதன் பின்னர் அவர்கள் அந்த மர்மங்களை ஆராய ஆரம்பிக்கிறார்கள். அதன் பிறகு நடக்கும் திகில் சம்பவங்களே இப்படத்தின் கதைக்களமாக அமைந்துள்ளது. இப்படத்தில் அம்மாவாக அபிநயா நடித்திருக்கிறார்.

இரட்டை குழந்தைகளாக அனுமிதா மற்றும் அனுஷிதா நடித்துள்ளனர். மேலும் சுப்ரமணிய சிவா, சங்கீதா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஆசியா ஐகானிக் ஸ்டுடியோஸ் சார்பில் ராஜேஸ்வரி லக்ஷ்மிநாராயணன், வினோத் கண்ணன், மற்றும் ஹரிஹரன் இணை தயாரிப்பில் படம் உருவாகியுள்ளது. சிவானி ஸ்டுடியோ நிறுவனம் உலகமெங்கும் திரையரங்குகளில் வெளியிடுகிறது. வசனம் பால பாரதி. ஒளிப்பதிவு முகமது அமீன் இசை ஜிகேவி.

# காளையுடன் நடிக்க பயந்து படத்தை மறுத்த ஹீரோக்கள்: 'வடமஞ்சுவிரட்டு' இயக்குனர் தகவல்



அழகர் பிக்சர்ஸ் சார்பில் புதுகை ஏ.பழனிச்சாமி தயாரிக்க, சங்கிலி சிபிஏ எழுதி இயக்கியுள்ள படம், 'வடமஞ்சுவிரட்டு'. இதில் 'முருகா' அசோக், யாழினி முருகன், பக்கோடா பாண்டி, நமோ நாராயணன் நடித்துள்ளனர். ஈஸ்வரன் கார்த்திகேயன் ஒளிப்பதிவு செய்ய, முகேஷ் முனுசாமி இசை அமைத்துள்ளார். இதன் டிரைலர் மற்றும் ஆடியோ வெளியீட்டு விழாவில் ஸ்டண்ட் இயக்குனர் மிரட்டல் செல்வா, தயாரிப்பாளர் சங்க நிர்வாக குழு உறுப்பினர் ராஜா, யாழினி முருகன், சம்பத் ராம், சாய் கோபி, சிறுபட தயாரிப்பாளர் சங்க தலைவர் அன்புச்செல்வன், தமிழ்நாடு திரைப்பட இயக்குனர்கள் சங்க செயலாளர் ஆர்.வி.உதயகுமார், பேரரசு, அசோக் கலந்துகொண்டனர்.

அப்போது சங்கிலி சிபிஏ பேசியதாவது: இக்கதையை விமல், கலையரசன், தர்ஷன், விக்ராந்த் உள்பட சில ஹீரோக்களிடம் சொன்னேன். அனைவரும் தேதியில்லை என்று சொன்னார்கள். அது உண்மையான காரணம் இல்லை. இதில் காளை மாட்டுடன் நடிக்க வேண்டும் என்று அந்த ஹீரோக்கள் பயந்தனர். அசோக் மட்டுமே துணிச்சலாக காளை மாட்டுடன் நடித்தார். யாழினியின் போட்டோவை பார்த்துவிட்டு நாங்கள் அவரை தேர்வு செய்யவில்லை.

ஆனால், காளையுடன் நடிக்க வேண்டும் என்று சொன்னபோது பல நடிகைகள் பயந்து ஓடினார்கள். ஆனால், யாழினி மட்டும் அந்த மாட்டுடன் நடிக்கிறேன் என்று தைரியமாக முன்வந்தார். இப்படித்தான் யாழினி படத்துக்குள் வந்தார். முகேஷ் முனுசாமி தனக்கு கிராமத்து இசை தெரியாது என்றார். உடனே அவரை 300 கி.மீ தூரம் அழைத்துச் சென்று, நிஜமான கிராமம் எது என்று உணர வைத்த பிறகு அற்புதமாக இசை அமைத்தார்.

# பாவாடை பாணி கவர்ச்சி உடைக்கு மாறும் நடிகைகள்



சசிகுமாருடன் 'மை லார்ட்' படத்தில் நடித்த சைத்ரா ஆச்சர், அந்த படத்தில் கிராமத்து பெண்ணாக சேலை அணிந்து நடித்தார். பட புரமோஷன் நிகழ்ச்சிகளுக்கு ஹோம்லி டிரெஸ்ஸில் வந்தால் தொடர்ந்து இதே போன்று டிரடிஷன் டிரெஸ் கொடுத்தே படங்களில் நடிக்க வைத்து விடுவார்கள் என நினைத்து அந்த படத்தின் பட விழாவிலேயே பாவாடை ஸ்டைல் கிளாமர் டிரெஸ் போட்டு வந்தார். அதே போல தற்போது நடிகை பூஜா ஹெக்டேவும் இந்தி பட புரமோஷனுக்கு வந்திருந்தது பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

நடிகைகள் மத்தியில் இதுபோன்ற பாவாடை ஸ்டைல் கவர்ச்சி உடைக்கு இப்போது மவுசு ஏற்பட்டுள்ளது. நடிகைகள் பலரும் இதுபோன்ற உடைகளையே இப்போது அதிகம் டிமாண்ட் செய்கிறார்கள். அதிலும் பூஜா ஹெக்டே, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு இப்போது கிளாமரில் அதிக கவனம் செலுத்துகிறார். 'ஹே ஜவானி தோ இஷ்க் ஹோனா ஹே' இந்தி படத்தில் அவர் நடித்துள்ளார். இந்த படத்தின் புரமோஷனில்தான் இவர் பாவாடை பாணி உடையில் வந்தார். இதே படத்தில் லிப்லாக் காட்சி, பிகினி காட்சிகளிலும் பூஜா ஹெக்டே நடித்திருக்கிறார்.



# 30 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் சினிமாவில் ரீஎண்ட்ரி கொடுக்கும் 'டூயட்' பட நடிகை

90களில் சினிமா ரசிகர்களின் கனவுக்கன்னியாக திகழ்ந்த நடிகை மீனாட்சி சேஷாத்ரி, மீண்டும் திரைப்படங்களில் நடிக்க உள்ளதாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. 1983ம் ஆண்டு வெளியான 'பெயிண்டர் பாபு' திரைப்படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமான மீனாட்சி சேஷாத்ரி, அதன் பின்னர் 'ஹீரோ', 'தாமினி' உள்ளிட்ட பல வெற்றி படங்களில் நடித்தார். இந்தி சினிமாவுடன் தமிழ் மற்றும் தெலுங்கு படங்களிலும் நடித்த அவர், தனது அழகு, நடிப்பு மற்றும் நடனத்தால் ரசிகர்களின் மனதில் தனி இடம் பிடித்தார். தமிழில் பாக்யராஜுடன் 'என் ரத்தத்தின் ரத்தமே' மற்றும் நடிகர் பிரபுவுடன் 'டூயட்' போன்ற படங்களில் நடித்துள்ளார்.

தனது சொந்த தயாரிப்பான 'கதக்' திரைப்படத்திற்குப் பிறகு சினிமாவை விட்டு விலகிய அவர், தனது குடும்பத்துடன் அமெரிக்காவில் குடியேறினார். அங்கு "செரிஷ் டான்ஸ் ஸ்கூல்" என்ற நடனப் பள்ளியை நடத்தி வருகிறார். மேலும், அவரது வாழ்க்கையை மையமாக கொண்டு "மீனாக்ஷி அக்சப்ட் ஹர் விங்ஸ்" என்ற ஆவணப்படமும் உருவாக்கப்பட்டது.

90களில் சினிமா ரசிகர்களின் கனவுக்கன்னியாக திகழ்ந்த நடிகை மீனாட்சி சேஷாத்ரி, மீண்டும் திரைப்படங்களில் நடிக்க உள்ளதாக அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பு ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. 1983ம் ஆண்டு வெளியான 'பெயிண்டர் பாபு' திரைப்படத்தின் மூலம் நடிகையாக அறிமுகமான மீனாட்சி சேஷாத்ரி, அதன் பின்னர் 'ஹீரோ', 'தாமினி' உள்ளிட்ட பல வெற்றி படங்களில் நடித்தார். இந்தி சினிமாவுடன் தமிழ் மற்றும் தெலுங்கு படங்களிலும் நடித்த அவர், தனது அழகு, நடிப்பு மற்றும் நடனத்தால் ரசிகர்களின் மனதில் தனி இடம் பிடித்தார். தமிழில் பாக்யராஜுடன் 'என் ரத்தத்தின் ரத்தமே' மற்றும் நடிகர் பிரபுவுடன் 'டூயட்' போன்ற படங்களில் நடித்துள்ளார்.

தனது சொந்த தயாரிப்பான 'கதக்' திரைப்படத்திற்குப் பிறகு சினிமாவை விட்டு விலகிய அவர், தனது குடும்பத்துடன் அமெரிக்காவில் குடியேறினார். அங்கு "செரிஷ் டான்ஸ் ஸ்கூல்" என்ற நடனப் பள்ளியை நடத்தி வருகிறார். மேலும், அவரது வாழ்க்கையை மையமாக கொண்டு "மீனாக்ஷி அக்சப்ட் ஹர் விங்ஸ்" என்ற ஆவணப்படமும் உருவாக்கப்பட்டது.




# மே 29ல் ஓடிடியில் வெளியாகிறது 'லீடர்'

லெஜண்ட் சரவணன் நடித்த 'லீடர்' திரைப்படம் ஓடிடியில் வெளியாக உள்ளது. இதனை படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

'தி லெஜண்ட்' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகனாக அறிமுகமான லெஜண்ட் சரவணனின் இரண்டாவது படம் 'லீடர்'. 'எதிர்நீச்சல்', 'காக்கி சட்டை', 'கொடி' மற்றும் 'கருடன்' உள்ளிட்ட திரைப்படங்களை இயக்கிய துரை செந்தில்குமார் இயக்கத்தில் 'லெஜெண்ட்' சரவணன் தயாரித்து நாயகனாக நடித்தார்.

சந்தோஷ் பிரதாப், ஷாம், ஆண்ட்ரியா உள்ளிட்டோர் இப்படத்தில் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். ஸ்பை த்ரில்லர் ஜானரில் உருவான இப்படத்துக்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். கடந்த ஏப்ரல் 3 அன்று வெளியான இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்றது.

இந்த நிலையில் இப்படம் தற்போது ஓடிடி வெளியீட்டுக்கு தயாராகியுள்ளது. வரும் மே 29ஆம் தேதி அன்று இப்படம் அமேசான் ப்ரைம் ஓடிடி தளத்தில் வெளியாக உள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய நான்கு மொழிகளில் இப்படம் வெளியாக உள்ளதாக படக்குழு அதிகாரபூர்வமாக தெரிவித்துள்ளது.



# 10 வயது அதிகமான நடிகர் ரித்தேசுக்கு தாயாக நடித்தது ஏன்? நடிகை பாக்யஸ்ரீ பதில்

சத்ரபதி சிவாஜி மகாராஜின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு உருவாகியுள்ள 'ராஜா சிவாஜி' திரைப்படம் மூலம் முதன்முறையாக மராத்தி திரையுலகில் தடம் பதித்துள்ளார் நடிகர் அபிஷேக் பச்சன். இந்த படத்தில் சாம்ராஜ் சாகாஜி போஸ்லே என்ற முக்கிய கதாபாத்திரத்தில் அவர் நடித்துள்ளார். 'ராஜா சிவாஜி' திரைப்படத்தில் அபிஷேக் ஒரு போர்வீரரின் உடையை அணிந்துகொண்டு, போர்க்களத்தில் கர்ஜித்தபடியும், சத்ரபதி சிவாஜி மகாராஜாவுடன் தோன்றுகிறார். ஜியோ ஸ்டுடியோஸ், மும்பை பிலிம் கம்பெனி இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளது.

நடிகர் ரிதேஷ் தேஷ்முக் இயக்கி ஹீரோவாக நடித்த 'ராஜா சிவாஜி' திரைப்படம் மராத்தி, இந்தி மற்றும் தெலுங்கு மொழிகளில் கடந்த 1ம் தேதி திரையரங்குகளில் வெளியானது. இப்படத்தில் சஞ்சய் தத், அபிஷேக் பச்சன், ஜெனிலியா, வித்யா பாலன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். வரலாற்று கதைக்களத்தில் அமைந்திருந்த 'ராஜா சிவாஜி' திரைப்படம் விமர்சன ரீதியாகவும், வசூல் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. படத்தில் சத்ரபதி சிவாஜி மகாராஜ் கதாபாத்திரத்தில் நடித்த ரித்தேசுக்கு வீரத் தாயாக பாக்யஸ்ரீ நடித்துள்ளார்.

பாலிவுட் திரை உலகில் பிரபல நடிகரும் நடிகை ஜெனிலியாவின் கணவருமான ரித்தேஷ் தேஷ்முக் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'ராஜா சிவாஜி' படம். ரூ.101 கோடி வசூலைப் பெற்று சாதனை படைத்தது.

படத்தில் சத்ரபதி சிவாஜி மகாராஜ் கதாபாத்திரத்தில் நடித்த ரித்தேசுக்கு வீரத் தாயாக பாக்யஸ்ரீ நடித்திருந்தார். பாக்யஸ்ரீக்கு ரித்தேசைவிட 10 வயது குறைவு. வயது குறித்து பல்வேறு டிரோல்கள் அவருக்கு எதிராக சமூக வலைதள பக்கங்களில் எழுந்தது.

இதற்கு பதில் அளித்து பாக்யஸ்ரீ கூறுகையில், "சிறு வயதில் இருந்தே கதைகளாக கேட்டு வளர்ந்த ஒரு கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்பு கிடைக்கும்போது வேண்டாம் என்று சொல்வதற்கு எந்த கேள்வியும் விடாது. அது மட்டுமல்லாமல் படத்தில் இளம் வயது தாயாக நடித்திருந்தேன். இது மட்டுமல்ல சந்தோஷ் சிவன் என்னை அழைத்து மன்னிக்கவும் கேமரா தொழில்நுட்பம் மூலம் உங்களை வயதானவராக காட்ட வேண்டி இருந்தது. ஆனாலும் இளையவராக தெரிகிறீர்கள் என்று கூறினார். இதைவிட வேறு என்ன மகிழ்ச்சி வேண்டும்" என்று கூறினார்,

# வெற்றிமாறனின் 'அரசன்' படத்துக்காக வட சென்னை செட்



வெற்றிமாறன் இயக்கத்தில் சிலம்பரசன் ஹீரோவாக நடித்து வரும் படம், 'அரசன்'. இதில் அவர் 3 வித வித்தியாசமான தோற்றத்தில் வருகிறார்.

வெற்றி மாறனின் 'வட சென்னை' சினிமாடிக் யுனிவர்ஸாக உருவாகும் இதில் விஜய் சேதுபதி முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். அமீர், சமுத்திரக்கனி, கிஷோர், ஆண்ட்ரியா உள்ளிட்டோர் நடிக்கின்றனர். அனிருத் இசையமைக்கிறார். வி கிரியேஷன்ஸ் சார்பில் கலைப்புலி எஸ்.தாணு தயாரிக்கும் இந்தப் படத்துக்குச் சென்னை கிழக்கு கடற்கரைச் சாலை பகுதியில் பிரம்மாண்டமாக வட சென்னை செட் அமைத்துள்ளனர்.

மெகா பட்ஜெட்டில் உருவாக்கப்பட்டுள்ள அந்த செட்டில் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. இப்படம் இந்தாண்டு இறுதியில் வெளியாகும் என்று கூறப்பட்ட நிலையில் தீபாவளிக்கு வெளியிட இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



# திருச்சுழியில் வைகாசி விசாக பெருவிழா

விருதுநகர், ஜூன்.01-

விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் வைகாசி விசாக பால்குட கமிட்டியின் சார்பில் 44ஆம் ஆண்டு வைகாசி விசாக பெருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு முருகப்பெருமானுக்கு பால்குடம் ஏந்தி நேர்த்திக்கடன் செலுத்தினர். விழாவை முன்னிட்டு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை உள்ளிட்ட பல்வேறு ஆன்மிக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து பக்தர்கள் ஊர்வலமாக சென்று பால்குடம் சமர்ப்பித்தனர். பக்தி முழக்கங்களுடன் நடைபெற்ற இந்த விழா பக்தர்களிடையே ஆன்மிக உற்சாகத்தை ஏற்படுத்தியது.விழாவில் உள்ளூர் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் திரளாக பங்கேற்றனர். நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் வைகாசி விசாக பால்குட கமிட்டியினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# அறிவியல் இயக்கம் சார்பாக கல்லலில் உலகப் புகையிலை எதிர்ப்பு தின விழா



சிவகங்கை, ஜூன்.01-

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சிவகங்கை மாவட்டம் கல்லல் கிளை மற்றும் விக்ரம் சாராபாய் சர் சி வி ராமன் மற்றும் முத்துலட்சுமி துளிர் இல்லங்கள் சார்பாக உலக புகையிலை எதிர்ப்பு தின விழா மற்றும் உலக சுற்றுச்சூழல் தின விழா கொண்டாடப்பட்டது. கிளைச் செயலாளர் விநாயகமூர்த்தி வரவேற்புரை வழங்கினார். விழாவிற்கு தலைமை தாங்கிய மாவட்ட செயலாளர் பிரபு அறிவியல் பாடல் பாடியதுடன், புகையிலை பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகளை எடுத்துரைத்தார். சுற்றுச்சூழல் ஆர்வலர் நிஷா கிருஷ்ணன் மரக்கன்றுகளை மாணவர்களுக்கு பரிசளித்து சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார். இவ்விழாவில் இந்திய ராணுவத்தில் 24 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்ற வெற்றியுரை சேர்ந்த ஹவில்தார் தனபாலனுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. கல்லல் கிளை அறிவியல் இயக்க சிறப்பு அழைப்பாளர் சக்திவேல் நெகிழி பைகளின் தீமைகள் குறித்து எடுத்துரைத்தார். சுவரொட்டி தயாரித்தல் போட்டியில் சிவசங்கர் முதல் இடமும் தருண் இரண்டாம் இடமும் பாரத்விஜயன் மூன்றாம் இடமும் பிடித்தனர். பேச்சுப் போட்டியில் அஹமது அப்சல் முதல் இடமும், பரந்தாமன் இரண்டாம் இடமும் பவ்யஸ்ரீ தர்ஷிகா மூன்றாம் இடமும் பிடித்தனர். துளிர் இல்ல ஒருங்கிணைப்பாளர் சித்திரைச் செல்வி நன்றியுரையாற்றினார். துளிர் இல்ல பொறுப்பாளர்கள் ரக்ஷினி சரண்யா அஸ்வினி சௌமியா இளவேனில் சர்மிளா விஷாலினி கவிநயா பாண்டிச்செல்வி ஜோதிமணி காந்திமதி விஜயலட்சுமி சரவண பிரவின் அபிஷேக் ஸ்ரீவிஷ்ணு புவனேஷ் வர்ஷன் அகிலேந்திரன் சேர்ந்த மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். கிளைப் பொருளாளர் நாகரத்தினம் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். செயற்குழு உறுப்பினர் மருதநாயகம் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்தார்.





# தமிழக வெற்றி கழகம் சார்பில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டுஏழை எளிய மக்களுக்கு மண்ணிவாக்கம் ஊராட்சியில் உணவு வழங்கினார்

மண்ணிவாக்கம், ஜூன்.01-

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்குட்பட்ட மண்ணிவாக்கம் ஊராட்சியில் உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் , பொதுமக்களுக்கும், ஏழைகளுக்கும் தங்குதடையின்றி உணவு வழங்கத் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரும், முதலமைச்சருமான ஜோசப் விஜய் உத்தரவிட்டிருந்தார் இந்த நிலையில் மண்ணிவாக்கம் ஊராட்சியில் பலஇடங்களில் உணவு வழங்கினார்கள் செங்கல்பட்டு மத்திய மாவட்ட செயலாளர் தியாகராஜன் அவருடைய ஆலோசனைப்படி மண்ணிவாக்கம் ஊராட்சி கழக நிர்வாகிகள் நித்திய செல்வராஜ், பார்த்திபன், லட்சுமணன் ஆகியோர் ஏற்பாட்டில் ஏழை எளிய பொது மக்களுக்கு உணவு வழங்கினார்கள் இதில் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்







# குன்னூர் தொகுதி கள ஆய்வு

குன்னூர், ஜூன்.1-

கழக தலைவர் தளபதி அறிவிப்பின்படி, நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்ற தொகுதிக்கான 2026 சட்டமன்ற தேர்தல் குறித்த "கள ஆய்வு" குன்னூர் புளூஹில்ஸ் ஹோட்டல் கூட்ட அரங்கில் திமுக மாவட்ட கழக பொறுப்பாளர் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம். ராஜூ தலைமையில் நடைபெற்றது.தலைமை கழக அறிவிப்பின்படி, கழக துணை அமைப்பு செயலாளர் தாயகம் கவி ணிஜ்.MLA, சட்டத்துறை துணை செயலாளர் என்.மருதுகணேஷ் ஆகியோர் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள் மற்றும் முன்னணியினரிடம் நடந்து முடிந்த தேர்தல் குறித்து கள ஆய்வு மேற்கொண்டனர்.





# பல்லாவரத்தில் சிறுபாண்மை மக்கள் நல கட்சி சார்பாக ஒன்றிய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

பல்லாவரம், ஜூன்.1-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகே சிறுபாண்மை மக்கள் நல கட்சி சார்பாக ஒன்றிய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது, மனிப்பூர் மாநிலம் காங்போக்பி மாவட்டத்தில் பழங்குடி கிருத்துவ மதபோதகர்கள் 3 பேரை கடுமையான முறையில் கொலைசெய்யப்பட்டதை கண்டித்து அந்த மாநில பாஜ.க அரசு மற்றும் ஒன்றிய பா.ஜ.க அரசுகளை கண்டித்து நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டம் சிறுபாண்மை நல கட்சி தலைவர் பேராயர் சாம் ஏசுதாஸ் தலைமைதாங்கினார், இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் 30 கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டு பா.ஜ.க அரசை கண்டித்து கோஷங்களை எழுப்பினார். இதில் கிருத்தவர்கள்களையும் கிருத்துவ திருசபைகளையும் பாதுகாக்க தவறிய மோடி அரசை கண்டித்தும், கிருத்துவ திருசபைகளை கொளுத்தும் பா.ஜ.க அரசை கண்டித்தும் கண்டன கோஷங்களை எழுப்பினார்கள்,பேட்டி : ஆர்.சாம் ஏசுதாஸ் ( தேசிய தலைவர், சிறுபான்மை மக்கள் நல கட்சி)

# தெற்கு ஆசியாவில் சக்தி வாய்ந்த நாடு இந்தியா: அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்சேத் கருத்து



தெற்கு ஆசியாவில் சக்தி வாய்ந்த நாடாக இந்தியா திகழ்வதாக அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்சேத் கூறியுள்ளார்.இந்தியா கடந்தாண்டு மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது இந்தியாவின் பலத்தை உலக நாடுகள் அறிந்தன. இந்நிலையில் ஆசியபசிபிக் பாதுகாப்பு உச்சி மாநாடு, சிங்கப்பூரில் உள்ள ஷாங்க்ரிலா ஓட்டலில் நேற்று நடைபெற்றது. இதில் 44 ஆசியபசிபிக் நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள், ராணுவத் தளபதிகள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்று நாடுகளுக்கு இடையேயான பாதுகாப்பு குறித்து ஆலோசித்து வருகின்றனர். இதில் அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் பீட் ஹெக்சேத் பேசியதாவது:தெற்கு ஆசியாவில் இந்தியா சக்தி வாய்ந்த நாடு. அது, தனது ராணுவத்தை நவீனமயமாக்கி வருகிறது. இந்தியாவின் வளர்ந்து வரும் ராணுவத் திறன்கள் மற்றும் நாடுகளுக்கு இடையே சமநிலையைப் பேணுவதில் அதன் உத்திகள் பாராட்டுக்குரியது. இந்தோபசிபிக் பாதுகாப்பு அமைப்பில், இந்தியாவின் பங்கு முக்கியமானது. தெற்காசியாவில், எல்லையைப் பாதுகாப்பதில் இந்தியா ஒரு முக்கியமான நாடாக உள்ளது. பாதுகாப்புத் திறன்களை வலுப்படுத்துவதற்காக இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை. உயர்தர ராணுவ நடவடிக்கைகளைத் தக்கவைக்க, பலமான தொழில்முறை மற்றும் தளவாடத் திறனை இந்தியா உருவாக்கி வருகிறது.அமெரிக்கா மற்றும் இந்தியா இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு விரிவடைந்து வருகிறது. இரு நாடுகளும் ராணுவத் தயார்நிலை மற்றும் திறன் மேம்பாட்டை அதிகரிக்க கூட்டு தயாரிப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. ஜாவெலின் என்ற டேங் எதிர்ப்பு ஏவுகணைகயை மேம்படுத்த இந்தியாவுடன் கூட்டு தயாரிப்பைத் தொடர நாங்கள் உறுதியளித்துள்ளோம். ராணுவ தளவாட உற்பத்தி மற்றும் ராணுவ செலவுகளை அதிகரிக்க அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.உலகின் மிகச்சிறந்த ஆயுதங்களை அதிக அளவில், அதிவேகத்தில் மற்றும் நியாயமான விலையில் நாங்கள் தயாரிப்போம். அதிபர் ட்ரம்ப், கடந்த ஆண்டு பாதுகாப்புக்காக 1 டிரில்லியன் டாலர் செலவிட்டார். இவ்வாறு அவர் கூறினார்.

# “எனக்கு அமைச்சர் பதவி வேண்டாம்; பதவிக்காக அரசியலுக்கு வரவில்லை” ஜோஸ் சார்லஸ் மார்டின்



"எனக்கு அமைச்சர் பதவி வேண்டாம். பதவிக்காக நான் அரசியலுக்கு வரவில்லை. ஆனால், அமைச்சர்களை முதல்வர் விரைந்து நியமனம் செய்ய வேண்டும்" என்று லட்சிய ஜனநாயக கட்சியின் நிறுவனர் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் எம்எல்ஏ தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் பேசுகையில், “புதுச்சேரியில் அமைச்சர்கள் நியமனம், அவர்களுக்கு இலாகா ஒதுக்குவது தாமதமாகிக் கொண்டிருக்கிறது. இதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர். மக்கள் வரிப்பணத்தில் தான் தேர்தலை நடத்தியுள்ளோம். எனக்கு அமைச்சர் பதவி கொடுக்க வேண்டும் என்றும், அதற்காக ரூ.100 கோடி வரை பேரம் பேசப்படுகிறது என்றும் சில சர்ச்சைகள் வெளியே வந்தது. அமைச்சர்கள் நியமனம் செய்வது என்னாலோ அல்லது என்னைச் சார்ந்தவர்களாலோ தாமதம் ஏற்பட்டால் அந்த தாமதத்தை விலகச் செய்ய வேண்டும்.எனக்கு எந்தப் பதவியும் வேண்டாம். நான் பதவிக்காக அரசியலுக்கு வரவில்லை. மக்களுக்கு சேவை செய்யவே வந்துள்ளேன். எம்எல்ஏவாக இருந்து என்ன முடியுமோ அதனைக்கொண்டு என்னுடைய காமராஜ் நகர் தொகுதியை மாதிரி தொகுதியாக மாற்ற வேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை. அந்தப் பணியை நான் தொடங்க உள்ளேன். அதனால் எனக்கு பதவி வேண்டாம். என்னால் தான் தாமதம் என்றால், என்னை விடுத்து விரைவாக அமைச்சரவையை விரிவாக்கம் செய்ய வேண்டும் எனக் கோரி துணைநிலை ஆளுநரை சந்தித்து மனு அளித்துள்ளோம்.பக்கத்து மாநிலமான தமிழகத்தில் புதிய அரசு அமைந்துள்ளது. அவர்கள் உடனடியாக அமைச்சர்களை நியமித்து பணிகளை செய்ய ஆரம்பித்துவிட்டனர். அனுபவம் இல்லாதவர்கள் கூட அவரவர் துறைகளுக்கு சென்று பணிகளை செய்கின்றனர். ஆனால் பல ஆண்டுகள் அரசியலில் நின்று மிகப்பெரிய அனுபவத்துடன் இருந்தும் அமைச்சரவையை அமைக்க தாமதப்படுத்துவது மக்களுக்கு நல்லதல்ல.

வரும் காலம் மழைக் காலம். வாய்க்கால்கள் அனைத்தும் தூர்வார வேண்டும். குறிப்பாக உப்பனாறு, வெள்ளவாரி வாய்க்கால் மழையால் பாதிப்பு ஏற்படும். அந்த வாய்க்கால் தூர்வாரப்படாததால் சமீபத்தில் பெய்த மழையில் காமராஜ் நகர் தொகுதி முழுவதும் தண்ணீர் தேங்கி மக்கள் பாதிக்கப்பட்டனர்.இதனை எந்த அமைச்சரிடம் சென்று கேட்பது. அரசு அதிகாரிகளிடம் கேட்டால் கடந்த முறை மழைக் காலத்தில் வேலை செய்ததற்கே பணம் கொடுக்கவில்லை. அதனால் எங்களால் செய்ய முடியாது என்று கூறுகின்றனர். இதனால் நாங்கள் எங்கள் சொந்த செலவில் அதனை சரி செய்தோம். 8 டிராக்டர் அளவில் குப்பைகள் அள்ளப்பட்டன. இதையெல்லாம் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டால் தான் அனைத்தையும் விரைந்து செய்ய முடியும். எனவே விரைவாக அமைச்சர்களை நியமிக்க வேண்டும், என்றார்.தொடர்ந்து அவர் கூறும்போது, புதுச்சேரியை சிங்கப்பூராக மாற்றுவேன் என்று கூறினேன். சிங்கப்பூரில் இருந்து இன்று ஒரு குழுவினர் புதுச்சேரி, காரைக்காலை பார்வையிட வருகின்றனர். சில மாதிரிகளை அவர்கள் கொடுத்துள்ளனர். அது தொடர்பாக பேச உள்ளோம். காமராஜ் நகரை மாதிரி தொகுதியாக மாற்றுவேன் என்று சொல்லி வருகின்றேன். அதற்கான பணிகளை தொடங்கிவிட்டேன். கூடிய விரைவில் அது மாறிவிடும். தமிழகத்தில் தவெகவை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

காலச்சூழ்நிலைக்கு ஏற்ப ஒவ்வொன்றும் மாறும். இன்று இளைஞர்கள் நல்லது செய்ய வேண்டும் என்று அரசியலுக்கு வருகின்றோம். யாரும் பதவிக்கோ, பணம் சம்பாதிக்கவோ வரவில்லை. அதனால் மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். எங்கள் கட்சியை பலப்படுத்தும் பணியை மேற்கொண்டு வருகின்றோம். தமிழகத்திலும் எங்களின் கட்சியை தொடங்கியுள்ளோம்.” என்று தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161